**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.</u>**

**<u>நாள். 19.08.2025</u>**

**<u>O.S. 34/2023</u>**

**<u>வா.சா. 1</u> - ரெத்தினசிகாமணி**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

வா.சா.ஆ.8 பாகபத்திர ஆவணம் எனக்கு யார் கொடுத்தார்கள் என்றால் பதிவு அலுவலகத்தில் இருந்து எடுக்கப்பட்டது. வா.சா.ஆ.8 ல் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் தெரியும். வா.சா.ஆ.8 ஆவணம் 31.05.1974 அன்று உருவாக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணம் பொன்னுசாமி நாடாரின் வாரிசுகள் நேசபாண்டிய நாடாச்சி மற்றும் நாடாச்சி தங்கம் ஆகியோரின் தாய் ராமநாடாச்சியும் சேர்ந்து ஏற்படுத்தி கொண்ட பாகப்பத்திர ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணம் யார் யாருக்கு என்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் வழக்கு பட்டிகை சொத்தை தவிர வேறு சொத்துக்கள் பற்றி தெரியாது. மொத்தம் 51 சென்டில் தெற்கு பகுதி 24 ½ சென்ட் தான் நேசபாண்டிய நாடாச்சி மற்றும் நாடாச்சி தங்கம் ஆகியோர் பாகம் வைத்தது என்றால் சரிதான். அவ்வாறு பாகம் வைத்ததில் நாடாச்சி தங்கத்திற்கு ஏ பட்டிகையும் நேசபாண்டிய நாடாச்சிக்கு பி பட்டிகையும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ராமுநாடாச்சிக்கு எவ்வித பாகமும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். தெற்கு பக்கம் 24 ½ சென்ட் மேற்கணைய 12 ¼ சொத்து நாடாச்சி தங்கத்திற்கு ஏ பட்டிகையில் 7 வது ஐட்ட சொத்தாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். நேசபாண்டிய நாடாச்சிக்கு கிழக்கணைய 12¼ சென்ட் சொத்து பி பட்டிகையில் 5 வது ஐட்ட சொத்தாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தெற்கு பக்கம் உள்ள 24 ½ சென்ட்டில் 3 சென்ட் சொத்து நான்

விலைக்கு வாங்கினேன் மேற்படி சொத்தை நான் ராமசுவாமி என்பவரின் மனைவி மற்றும் பிள்ளைகளிடம் இருந்து வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி 3 சென்ட் சொத்து 08.06.2011 அன்று வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி 3 சென்ட் வாங்கும் சமயத்தில் துரைமணிநாடார் மகன் ராமசந்திரன் என்பவர் ஊர் தலைவராக இருந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டடப்படும் கிரைய ஆவணம் ஆனது 3 சென்ட் சொத்தை நான் விலைக்கு வாங்கியதற்கான கிரய ஆவணம் என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் 3 சென்ட் வாங்கியதற்கான கிரய ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை தாக்கல் செய்யலாம்.

பி.வா.சா.ஆ.1ல் 3 சென்ட்டுக்கான சொத்து விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரத்தில் சொத்து சர்வே எண். 562/7 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் மேற்படி சொத்து கொட்டாரம் கிராமத்திற்கு உட்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கு பழைய சர்வே எண். 3676 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் இதற்கு முன்பான பாகப்பத்திரத்தினுடைய ஆவண எண் குறிப்பிடப்படவில்லை. பழைய சர்வே எண். 3676 ல் மொத்தம் 51 சென்ட்டில் பங்கு இரண்டாக தெற்கணைய பங்கு 1க்கு 25 ½ சென்றில் கிழக்கடக்கி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் நாடாச்சி தங்கம் எனபவருக்குரிய சொத்து மேற்கணைய 12¼ சென்ட். மேற்படி சொத்து விபரத்தில் கிழக்கடக்கி தென்வடல் நீளம் கொண்டு கிடப்புள்ள 3 சென்றுக்கு சமமான 121.41 சதுர மீட்டர் கட்டிடம் இல்லாத காலிமனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி சொத்தின் கிழக்கில் ரோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.1ல் சொத்தின் கிழக்கில் ரோடு என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.1ல் சொத்தின் மேற்கு எல்கை பால்நாடார் மனை என்று உள்ளது என்றால் அது தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.1ல் சொத்தின் தெற்கு ரோடு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் சொத்தின் வடக்கில் நாராயண சாமி கோவில் சொத்து இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் சொத்தில் தவறுகள் இருப்பதாக எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2023ல் தெரிய வந்தது. தற்போதும் நான் கிரயம் பெற்ற ராமசாமியின் மனைவி மற்றும் மக்கள் உயிருடன் தான் இருக்கிறார்கள் என்றால் சரிதான். நான் பி.வா.சா.ஆ.1ல் உள்ள தவறுகளை திருத்த இதுவரையில் முற்படவில்லை என்றால் சரிதான்.

நான் கிழக்கணைய 24½ சென்ட்டில் கிழக்கற்றத்தில் 3 சென்ட்டை தான் விலைக்கு வாங்கயுள்ளேன் ஆகையால் பி.வா.சா.ஆ.1யை நாளது தேதிவரை திருத்தாமல் காலம் தாழ்த்தி வருகிறேன் என்றால் சரியல்ல. செல்லநாடார் என்பர் எனது ஊரில் தலைவராக இருந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சான்றிட்ட நகல் 09.12.2000 அன்று செல்லநாடார் தலைவராக இருந்தபோது ஊருக்கு பாத்தியப்பட்ட 17½ சென்ட்டில் 10½ சென்ட்டை அரசாங்கத்திற்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 2015ம் ராமசந்திரன் என்பவர் ஊர் தலைவராக இருந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி ராமசந்திரன் தமிழ்நாடு அரசுக்கு 7 சென்ட்டை 16.03.2015 அன்று எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். **மேற்படி ஆவணத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி ராமசந்திரன் தமிழ்நாடு அரசுக்கு ஊருக்கு

பாத்தியப்பட்ட 6 சென்ட் சொத்தில் 2 சென்ட்டை 11.01.2012 அன்று எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். **மேற்படி ஆவணத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஆகையால் நான் பிரமாண வாக்குமூலத்தில் 17 ½ சென்ட் சொத்தும் மற்றும் 6 சென்ட் சொத்தும் தற்போதும் 1ம் வாதியின் பெயரில் தான் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் அரசுக்கு எழுதிக்கொடுத்து விட்டார்கள் அந்த இடத்தில் தான் கோவில் உள்ளது. தமிழ்நாடு அரசுக்கு எழுதிக்கொடுத்த காரணத்தினால் எனக்கு மேற்படி சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை நான் பிரமாண வாக்குமூலத்தில் 1ம் வாதியின் பெயரில் சொத்து இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. எனது ஊரில் 307 வரிதாரர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். எத்தனை வீடுகள் உள்ளன என்றால் 150 வீடுகள்.

வெள்ளையன் தோப்பு ஊரில் சுமார் 400 பேர் வசிப்பார்களா என்றால் 600 பேர் வசிப்பார்கள். ஆகையால் நான் பிரமாண வாக்குமூலத்தில் 1000 த்திற்கும் மேலாக வசிக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. எனது ஊரில் முத்தாரம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். எனது ஊரில் சுடலைமாட சுவாமி கோவில் உள்ளதா என்றால் உள்ளது ஒரு குடும்பத்திற்கு ஒரு கோவில் உள்ளது. எங்கள் ஊரில் இசக்கியம்மன் கோவில் உள்ளதா என்றால் மூன்று கோவில் உள்ளது. எனது குடும்பகோவில் பிரம்மசக்தி அம்மாள் கோவில் உள்ளது என்றால் சரிதான். வேம்படி சுடலைமாடசுவாமி கோவில் உள்ளது என்றால் சரிதான். 1ம் வாதி கோவிலின் வரிதாரர்கள் மேற்படி கோவிலில் பூஜை செய்து சாமியை வழபட்டு கொடை நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். 1ம் வாதி கோவில் ஐயாவழி கோவிலை சம்மந்தப்பட்டது என்று பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் ஐயாவழி என்பது இந்து சமயத்தில் இருந்து கணிசமாக வேறு படுகிறது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஐயாவழி என்பது இந்து சமயத்தில் இருந்து கணிசமாக வேறு படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது எவ்வாறு வேறுபடுகிறது என்றால் பத்தி, கற்பூரம், பலிகொடுத்தல், தொட்டு நாமம் சாத்துதல், தலைபாகை அணிந்து வருவார்கள் உருவ வழிபாடு கிடையாது மேற்படி காரணங்களால் தான் கணிசமாக மாறுபட்டது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான். ஐயா வழி பின்பற்றும் நபர்கள் அம்மன் கோவிலுக்கு செல்ல மாட்டார்கள் திருநீர் மற்றும் குங்குமம் வைக்கமாட்டார்கள் என்றால் சரிதான். நான் ஐயா வழியை பின்பற்றுபவரா என்றால் நான் எல்லா வழியும்பின்பற்றுவேன். எனக்கு நிரந்தரமாக வழிபாடு செய்வதற்கு ஒரு வழி இல்லை என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் இருப்பவர்கள் மற்றும் வரிதாரர்கள் அனைத்து கோவிலுக்கும் சென்று வழிபடுவார்கள்.

ஐயா வழியின் சீடர்கள் எந்நெந்த ஊரில் இருக்கிறார்கள் என்பது குறித்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நிழல் தாக்கல்கள் எத்தனை உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 1ம் வாதி கோவிலை நிறுவியது யார் என்றால் ஐந்து பேர் சேர்ந்து நிறுவினார்கள். மேற்படி ஐந்து நபர்கள் நாகமணி, பள்ளிகொண்ட பெருமாள், அருகுலமாடநாடார் இன்னும் இரண்டு நபர்கள் சரியாக நியாபகம் இல்லை. மேற்படி நபர்கள் 1930 ல் 1ம் வாதி கோவிலை நிறுவினார்கள் என்றால் சரிதான். 1930 ல் நிறுவிய விபரம் எவ்வாறு தெரியும் என்றால் கோவில் கல்வெட்டில் பார்த்துள்ளேன். 1930 ம் ஆண்டு நிறுவியதாக காட்டுவதற்கு எந்த ஆதாரமும் இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்யலாமா என்றால் முடியாது. ஊரில் மேற்கே மற்றொரு நாராயண சாமி கோவில் உள்ளது அது ஊர் கோவில் என்றால் சரிதான். மேற்படி நாராயண சாமி கோவிலை

நிறுவியது யார் என்றால் பொன்னணைந்த பெருமாள் நாடார் தந்தை பெயர் தெரியாது. 1930 ம் ஆண்டு தற்போது 1ம் வாதி கோவில் இருக்கும் இடத்தோடு சேர்ந்த 51 சென்ட்டும் அருகுலமாடநாடார் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

அருகுலமாடநாடார் தான் 1ம் வாதி கோவிலை அவரது குடும்ப கோவிலாக நிறுவினார் என்றால் நிறுவினார் ஆனால் குடும்ப கோவிலாக நிறுவவில்லை. அருகுலமாடநாடார் தவிர வேறு நபர்களுக்கு உரிமை இருப்பதாக காட்ட ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. வேறு நபர்கள் சேர்ந்து நிறுவியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேற்கே உள்ள நராயணசாமி கோவிலின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. மேற்படி கோவில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. 1ம் வாதி கோவிலை நிர்வகிப்பதற்கு எந்த ஆண்டில் இருந்து நிர்வாகிகள் நிர்வாகம் செய்வதற்கு தேர்தெடுக்கப்பட்டார்கள் என்றால் தெரியாது.

நிர்வாகிகளை தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் என்றால் சரிதான். இதுவரையில் தேர்தல் நடைபெறவில்லை என்றால் சரிதான். மேற்படி கோவிலில் இதற்கு முன் இருந்தவர்கள் கல்வியறிவு பெற்றவர்கள் என்றால் சரிதான். மேற்படி கோவிலில் எனக்கு முன்பாக சுமார் எத்தனை தலைவர்கள் இருந்தார்கள் என்றால் 10 பேரை தெரியும். 10 பேருக்கு முன்பு இருந்த நபர்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்கு பக்கத்தில்இருக்கும் நாராயண சுவாமி கோவிலை எந்த வருடம் இடித்தோம் என்றால் 1981 ல். மேற்படி கோவிலை இடிப்பதற்கு முன்பாக வெள்ளையந்தோப்பு ஊர் இரண்டாக இருந்தது என்றால் சரிதான். நான் எந்த கோவிலில் இருந்தேன் என்றால் தற்போது இருக்கும் 1 வது வாதிகோவிலில் தான் வரிதாரராக இருந்தேன்.

1ம் வாதி கோவிலுடன் இடக்கப்பட்ட நாராணய சுவாமி கோவிலின் வரிதாரர்களை

இணைப்பதற்கு ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.11 குறுந்தகடில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி குறுந்தகட்டில் பதியப்பட்ட விபரங்களுக்கு எவ்வித சான்றிதழும் நான் வாங்கவில்லை என்றால் சரிதான். மேற்படி குறுந்தகட்டில் விபரங்கள் யார் பதிவு செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மொத்தம் 51 சென்ட் நிலத்தில் தெற்கு பாத்தியப்பட்ட 24½ சென்ட் சொத்து அருகுலநாடாரின் மகன் பொன்னுசாமிக்கு பாத்தியப்பட்டு தற்போது அவரது பிள்ளைகள் நேசபாண்டிய நாடாச்சி மற்றும் நாடாச்சி தங்கம் சொத்தில் தான் ஆஞ்சநேயர் சிலையை 05.02.2023 அன்று வைத்தோம் என்றால் சரியல்ல சிலையை நாங்கள் வாங்கிய பின் தான் வைத்துள்ளோம். நாடாச்சி தங்கத்திற்கு பாத்தியப்பட்ட 12¼ சென்ட்டில் தான் ஆஞ்சநேயர் சிலை வைத்திருக்கிறோம் என்றால் சரிதான். நாடாச்சி தங்கத்திற்கு பாத்தியப்பட்ட 12¼ சென்ட்டில் எப்போது ஆஞ்சநேயர் சிலை வைத்தோம் என்றால் 2011ல் வைத்தோம். நாடாச்சி தங்கத்திற்கு பாத்தியப்பட்ட 12¼ சென்ட்டில் நான் விலைக்கு வாங்கிய 3 சென்ட்டில் தான் ஆஞ்சநேயர் சிலை வைத்தோம் என்றால் சரிதான்.

நான் கூறிய 3 சென்ட் பி.வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள 3 சென்ட் என்றால் சரிதான் அதன் எல்கை தவறு. பி.வா.சா.ஆ.1ன் படி வாங்கிய மூன்று சென்ட்டில் கிழக்கற்றத்தில் ஒரு ஷெட் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ன் படி வாங்கிய 3 சென்ட்டிற்கு காம்பவுண்டு சுவர் கட்டியுள்ளேனா என்றால் கட்டியுள்ளேன். மேற்படி 3 சென்ட்டை தவிர மீதமுள்ள 12 ¼ சென்ட்டில் காம்பவுண்டு சுவர் இல்லை என்றால் சரிதான். மேற்படி 3 சென்ட்டிற்கு கட்டியுள்ள காம்பவுண்டு சுவருக்கு கேட் போட்டுள்ளோம் என்றால் சரிதான். ஆஞ்சநேயர் சிலை சுமார் 2 ½ அடி இருக்குமா என்றால்

இருக்கும். மேற்படி சிலையை சுற்றி சுவர், வாசல், கதவு, ஜன்னல் எதுவும் கிடையாது என்றால் சரிதான் மேலே மட்டும் ஷெட் உள்ளது. ஆஞ்சநேயர் சிலை யாரால் தயார் செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. ஆஞ்சநேயர் சிலைக்கு மேலே உள்ள ஷெட் எந்த வருடம் போடப்பட்டது என்றால் 2011ம் வருடம். ஆஞ்சநேயர் சிலை மற்றும் ஷெட் அமைக்கும் சமயம் செயலாளர், தலைவர், செயலாளர் யார் என்றால் தெரியாது தலைவர் ராமசந்திரன்.

2ம் பிரதிவாதி ராமசாமி 03.03.2023 அன்று என்மீதும் ரெத்தினசாமி மற்றும் தங்கதுரை, முருகேசன், பாலன் ஆகியோருக்கு எதிராக பூமியில் அத்துமீறி நுழைந்து மரங்களை முறித்து சேதப்படுத்தியதாகவும் அவர்களை மிரட்டி அடித்ததாக புகார் அளித்தார் என்றால் சரிதான் அது பொய் புகார். 06.02.2023 அன்று 51 சென்ட்டில் தெற்கணைய 24 ½ சென்ட்டின் மையப்பகுதியில் ஆஞ்சநேயர் சிலை அத்துமீறி நுழைந்து வைத்ததாக ரெத்தினசிகாமணி, ராமசந்திரன், தங்கதுரை, முருகேசன், சுயம்புலிங்கம் ஆகியோர் எனக்கு எதிராக தாமரைகுளம் காவல்நிலையத்தில் புகார்மனு அளித்தார் என்றால் சரிதான் அது பொய் புகார். மேற்படி புகாரின் பேரில் காவல்துறையில் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி புகாரின் பேரில் DSP அலுவலகத்திலும் விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். அப்போது கன்னியாகுமரியில் DSP யாக ராஜா இருந்தார் என்றால் சரிதான். அப்போது ஆஞ்சநேயர் சிலைக்கு போலீஸ்பாதுகாப்பு போடப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சிலை சம்மந்தமாக 28.03.2023 அன்று நடத்தப்பட்ட law and order கூட்டத்தில் Resolution பாஸ் பண்ணப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் DSP Kanniyakumari at requested to remove the unauthorized structure in the Patta Land of Thiru. Ramasamy and report before 05.04.2023 என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். **மேற்படி Resolution பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடைய சர்வே எண்ணிலும் சிலை இருப்பதால் அதனை நாளது தேதிவரை அகற்ற முடியவில்லை.

ஊர் மக்கள் அனைவருக்கும் பொய்யான தகவல்களை சொல்லி மேற்படி நிலம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது இல்லை அவர்களுக்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்று சொல்லி ஆஞ்சநேயர் சிலை வைத்தால் தான் மேற்படி நிலத்தை எங்கள் ஊருக்கு எடுத்துக்கொள்ள முடியும் என்று சொல்லி ஊரில் உள்ள மக்களை மூளைசெலவு செய்து ஊருக்கு மேற்படி நிலத்தை இந்த நிர்வாகம் எடுத்துதரும் என்று கூறியதால் ஊர்மக்கள் அதனை நம்பி சொத்தின் உரிமையாளரான குடும்ப நபர்களை நீங்கள் சொத்தை எடுத்தால் உங்க குடும்பத்தையே அளித்து விடுவோம் என்று கூறினோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ன் படி மேற்படி சிலையை அகற்ற கோரி DSP என்னிடம் கூறினார் என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.5 ல் there is a possibility of law and order issue regarding the removal of Anjaneyar Statue kept in without the permission of 2nd Defendant Thiru. Ramasamy in Velliyanthoopu land owner of the site என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் நாடாச்சி தங்கத்தால் மேற்படி நிலம் ராமசாமிக்கு விலைக்கு கொடுக்கப்பட்டது. மேற்படி நாடாச்சி தங்கத்தால் மேற்படி நிலம் ராமசாமிக்கு விலைக்கு கொடுக்கப்பட்டதாக பி.வா.சா.ஆ.5 ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.7 யாரால் என்னிடம் கொடுக்கப்பட்டது என்றால் ஆவணங்களின் கோப்பில் இருந்து எனக்கு முன் இருந்தவர்களால் கொடுக்கப்பட்டது. முன்பாக இருந்தவர்கள் யார் என்றால் மாசானமுத்து தலைவர், சுரேஷ் செயலாளர், நாகராஜன் பொருளாளராக இருந்தார்கள். முத்துக்குமார்

என்பர் எக்ஸிகூட்டியாக இருந்தார் வேறு யார் என்னென்ன பதவியில் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.7 பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ல் எத்தனை பிரிவுகள் இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.10 எந்த சர்வே எண்ணுக்கு உட்பட்டது என்றால் 562/7. வா.சா.ஆ.10 எந்த சொத்துக்கு உட்பட்டது என்றால் மொத்தம் 51 சென்ட்டுக்கு உட்பட்டது.

நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் தங்கம்மை நாடாச்சிக்கு எப்போது, எங்கு வைத்து திருமணம் நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் வெள்ளையன் தோப்பில் உள்ள அவர்கள் வீட்டில் வைத்து நடைபெற்றது.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**